144. தமிழ் நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாநில எல்லைக்குள் உள்ள பாண்டியன் கிராம வங்கிகளின் கிளைகள் அனைத்தையும் அங்கீகாரம் (ஏற்பளிக்கப் பட்ட) பெற்ற வங்கியாக சேர்த்துக் கொள்வது குறித்து வணிக வரிகள்-அறக்கட்டளைகள் துறையின் 23—2—1979 ஆம் தேதி யிடப்பட்ட அரசாணை எண். 199-ல் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டத்தின (தமிழ் நாடு சட்டம் 24/1961) 63 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பட்டது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

***170.** கோரிக்கை எண். 49-பொதுச் சுகாதாரம் மற்றும் குடிநீர் வழங்குதலுக்கான முதலீடு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1979—80 (தமிழ், ஆங்கிலம்).

குறிப்பு : தேவையிருப்பின், பேரவை மாலையிலும் கூடும்.

கோரிக்கை எண்கள். 29, 33, 49-க்கான வெட்டுத் தீர்மானற் களின் பட்டியல் 18—4—1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப் பப்பெற்றன.

**18—4—1979* அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.

இணைப்பு I.

[498 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 721-க் கான விடையைக்காண்க].

பல்லவமேடு தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத் துறையால் 1970—71 ஆம் ஆண்டுகளில் அகழ்வாய்வு செய்யப் பெற்றது. மத்திய தொல் பொருள் ஆய்வுத் துறையினரால் இதே பகுதியில் 1953—54 ஆம் ஆண்டுகளில் சில இடங்களில் அகழ்வாய்வு செய்யப்பெற்றது.

பல்லவமேடு காஞ்சிபுரத்தில் ஒரு மேடான பகுதியாக விளங்குகிறது. பல்லவ மன்னர்களுடன் தொடர்பு கொண்டு விளங்கியது என கூறப்படுகிறது. இந்த இடத்தில் தொன்மை யான வரலாற்றை அறிவதற்காக அகழ்வாய்வு செய்யப் பெற்றது. மூன்று குழிகள் தோண்டப் பட்டன. அகழ்வாய் வில் கிடைத்த பொருட்கள் பல்லவமேடு பகுதியின் வரலாற்றை அறிய உதவுகிறது. மூன்று வரலாற்றுக் காலத்தில் இங்கு மக்கள் வாழ்ந்திருந்தனர் என்று அச்சான்றுகள் கூறுகின்றன.

முதற் காலத்தில் (Period I) சிகப்பு நிற பானை ஒடுகள் அதிக அளவிலும் சுடுமண்பொம்மைகளும், சங்கு வளையல்களும் கிடைத்தன. அகழ் வாய்வுக் குழியின் கீழ் பகுதி மணலாக

1979 ஏப்ரல் 19]

இருந்தது. முன்பு வேகவதி ஆறு இங்கு ஓடிக் கொண்டிருந்தது என்பதை காட்டுகின்றது. பல்லவர் காலத்தில் கி.பி. 6 முதல் 9-ம் நூற்றாண்டுகளில் காஞ்சி நகரை ஒட்டி ஓடிக்கொண்டிருக்க வேண்டும். பின்பு ஆற்றின் போக்கு மாறிவிட்டது. தற்பொழுது காஞ்சிபுரத்திலிருந்து 2 கி. மீ. தொலைவில் ஓடுகின்றது. இக்குழியில் 6 மீட்டர் ஆழத்தில் மண் ஜாடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

(Period II) இரண்டாவது காலத்தின் மனிதன் வாழ்ந்ததற்கும் இரு பிரிவான கட்டிட அமைப்புகள் (Two structural phases) இருந்ததற்கும் சான்றுகள் கிடைத்துள்ளன. முதல் பிரிவில் களிமண் மேடையும் எரிந்ததற்கும் அடையாளங்கள் காணப்பட்டன. அதிலிருந்து கரித்துண்டுகள் சேகரிக்கப்பட்டன. குறியீடுகள் உள்ள (graffite) பானை ஓடுகள் கறுப்பு சிவப்பு பானை ஓடுகள், வர்ணம் தீட்டப்பட்ட பானை ஓடுகள், பச்சை நிறமணிகள் கிடைத்துள்ளன.

(Period III) மூன்றாவது காலத்தில் மண் குவியல் (debris) அதிக அளவில் காணப்பட்டது. உடைந்த செங்கற்கள் (சுண்ணாம்புடன்) சில கருங்கற் பலகைகள் ஆகியவை சேர்ந்து காணப்பட்டன. இது உடைந்த கட்டிடத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம். கட்டிடத்திற்கு ஏற்பட்ட அழிவு மிகவும் அதிகமானது. பல்லவ மன்னர்களின் ஆட்சி முடிவு காலமாகிய கி.பி. 8-9 ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட சண்டைகளினால் அழிந்திருக்கலாம். இப்பகுதியில் விஜயநகர மன்னர்கள் காலத்தில் கட்டப் பெற்ற மண்டபம் ஒன்று காணப்படுகிறது. இக்காலத்தில் மஞ்சள் நில கண்ணாடி மணிகள், புதை உருவங்கள், சுடு மண்ணால் ஆகிய சிவலிங்கம் சிவப்பு நிற பானை ஓடுகள், கறுப்பு நிற பானை ஓடுகள் கிடைத்தன.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு II.

[502 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 723-க்கான விடையைக் காண்க.]

பதில் : இல்லை.

ஆனால் கிராமப்புறங்களில் வீடு கட்டும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் அளிக்கப்படும் கடன் வசதிகள் பற்றிய முழு தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

கிராம கூட்டுறவு வீட்டு வசதி.

கிராம மக்களுக்குச் சீரான முறையில் வீடுகள் கட்டுவதற்கு வகை செய்யும் பொருட்டு, 1950-ம் ஆண்டு முதல் கிராம வீட்டு வசதி சங்கங்கள் துவக்கப்பட்டன. தற்போது கிராமப்பகுதிகளிலுள்ள உறுப்பினர்களின் தேவையை நிறைவு செய்ய 365 கிராம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன